**கடுகன்னாவ நகர சபை – 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுகன்னாவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடுகன்னாவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகைத் தினத்தில் உள்ளவாறு முடிவடைந்திருக்காத 30 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அடுத்த வருடம் சமர்ப்பிக்கப்படும் என. | கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 108,869 இற்கான நிலையான வைப்புக்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய திண்மக் கழிவுப் பொருள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த | வருமானத்திற்கு எடுத்து சரி செய்யப்படும் என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 111,103 இற்கான வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் நிர்மாண வேலைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 205,946 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் பிழையான முறையில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடத்தில் சரி செய்யப்படும் என. | -மேற்படி- |
| (ஈ) | சுற்றுலா நகரமாக மாற்றும் செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்த போதிலும் ரூபா 2,160,000 தொகை புகையிரத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டுமென பிழையான முறையில் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,373,616 இற்கான 03 கணக்கு மீதிகளின் பௌதீக ரீதியாக உளமை பதிவேடு, அட்டவணைகள் மற்றும் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | பரிசோதனை மேற்கொண்டு சரிசெய்யப்படும் என. | பதிவேடுகளை பௌதீக பரிசோதனை மேற்கொண்டு ஆவணப்படுத்தப்பட்ட கோப்புக்கள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2235/64 இலக்கங் கொண்ட 2021 ஜூலை 08 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்** | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) பந்தி 28(1) | சபையினால் வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் 49 நிர்மாணவேலைகள் காணப்பட்டன. | சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) பந்தி 84 | அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் மற்றும் அபிவிருத்தி வரைபின் படி பூர்த்தி செய்து வதிவதற்காக இணக்கச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 முதல் மீளாய்வாண்டு வரை காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 228 கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | |
| நிதிப் பிரமாணம் 571(3) | 2013 முதல் 2020 வரையான காலப் பகுதி தொடர்பாக 33 பலவின வைப்பு சந்தர்ப்பங்கள் மற்றும் 2014, 2022 காலப்பகுதிக்குரிய ரூபா 824,350 இற்கான 21 தடுத்து வைத்தல் சந்தர்ப்பங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு தீர்க்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,308,331 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 6,898,130 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 8,000,000 | 7,683,959 | 7,138,241 | 7,318,830 | 8,000,000 | 7,646,784 | 7,753,822 | 6,773,112 |
| வாடகை | 5,670,000 | 5,577,101 | 5,348,347 | 1,693,266 | 3,475,000 | 3,347,446 | 3,505,947 | 1,464,511 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 700,000 | 638,753 | 638,753 | - | 750,000 | 695,469 | 619,969 | 29,500 |
| ஏனைய வருமானங்கள் | 13,140,000 | 10,462,941 | 10,389,305 | 7,859,400 | 13,600,000 | 9,596,770 | 2,192,605 | 7,785,764 |
| **மொத்தம்** | **27,510,000** | **24,362,754** | **23,514,646** | **16,871,496** | **25,825,000** | **21,286,469** | **14,144,343** | **16,052,887** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று நிலுவை வீதவரி மீதி ரூபா 7,318,830 தொகையாகக் காணப்பட்டதுடன், அலகு ஒன்றின் வீதவரி நிலுவை ரூபா 5,000 இற்கு மிகையான 306 வீதவரி அலகுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 3,161,838 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்களை தடை செய்யும் அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,619,933 இற்கான நிலுவை கடை வாடகை மீதியில் ஒரு கடையறையின் நிலுவை கடை வாடகை ரூபா 754,650 தொகையும், ரூபா 10,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடைப்பட்ட 15 கடையறைகளின் நிலுவை மீதி ரூபா 453,758 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்காக உரிய தரப்பினரை அறிவுருத்தப்பட்டது என. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| நகர சபையினால் முச்சக்கரவண்டி தொடர்பாக துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்திருக்காததுடன் முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்களையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 20 முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்களை விட கூடுதலாக காணப்பட்ட போதிலும் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காமையால் சபையின் வருமானப் பாதை மறைக்கப்பட்டிருந்தது. | வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அறவீடு செய்யப்படும் என. | துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்து கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**(ஈ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 22,249 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,187,000 தொகை காணப்பட்டது. | பரிசோதனை செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தருவித்துக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றுதல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான விறகினை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் தகனகூடம் 2020 நவம்பர் 25 திகதி முதல் செயற்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதித் திகதியளவிலும் அதனை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக பொதுமக்கள் கடின கஷ்டங்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிட்டிருந்ததுடன் சபையின் வருமானம் உருவாக்கும் வழியும் முடங்கியிருந்தது. | செயற்திட்டமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தகனசாலை திருத்த வேலை மேற்கொண்டு பொதுமக்கள் சேவைக்காக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 118 ஏற்பாடுகளின் படி பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகளின் மல கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக முறைப் பிரகாரம் கிடங்குகள் உரிய காலப்பகுதியில் சுத்தம் செய்வதற்கு மற்றும் காலியாக்கக் கூடியவாறு சாக்கடை வண்டி சேவையொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான வசதிகள் பெற்றுக் கொள்வவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி 553 நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறை காணப்பட்டது. | சரியான மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பற்றாக்குறைக்குரிய தரப்பினரை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 158(உ) இணங்க விற்பனைகளின் மூலம், வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அல்லது சபையின் ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் மூலம் கிடைக்கக் கூடிய அனைத்து பணம் சபை நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரையான காலப் பகுதியில் திண்மக் கழிவுப் பொருள் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 1,163,267 இற்கான வருமானம் ஒன்றினை வருமானத்திற்கு செலவு வைக்காமல் சுகாதார தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சபை அங்கீகாரமொன்று காணப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா நகரமொன்றாக மாற்றுவதற்கான செயற்திட்டத்திற்காக 2021 மார்ச் 03 திகதி புகையிரதத் திணைக்களத்திற்கு ரூபா 1,360,400 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட ஆதனத்தை குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக இரு தரப்பினராலும் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருப்பிப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட கட்டிடம் சபைக்கு கிடைக்காமையால் அதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,360,400 இற்கான தொகையினை திருப்ப பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | சபைக்குச் சொந்தமான காணி ஒன்று 08 வீடுகள் நிர்மாணிப்பதற்காக 48 பர்சஸ்கள் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | நகர சபைக்கு சொந்தமான காணியொன்றாகும் என. | முறையான அங்கீகாரத்துடன் சொத்துக்கள் அகற்றப்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,660,537 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட ரூபா 612,080 தொகையும் 5 வருடங்களுக்கு மிகையான ரூபா 1,470,490 தொகையும் காணப்பட்டது. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காரணங்களை கண்டறிந்து தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018-2020 காலப் பகுதிக்கான ரூபா 832,301 இற்கான காணிக் குத்தகை கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காரணங்களை கண்டறிந்து தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த பங்களிப்பு ஓய்வூதிய மீதி ரூபா 538,187 தொகை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாட்டினை இனங்காணாமல் ரூபா 180,766 இற்கான 1273 சவர்க்காரக் கட்டிகள் கொள்வனவு செய்து களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | விலைத் தளம்பல் ஏற்பட்டது என. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். |

### 3.6 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 206,654,644 இற்கான 03 வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் 02 காணிகள் 01 வருடத்திற்கும் 15 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | ஏனைய நிறுவனங்களுக்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த வேண்டியதுடன் அவ்வாறு செய்ய முடியாவிடின் சொத்துக்களை அப்புறப்படுத்த வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் 04 காணிகள் மற்றும் கட்டிடங்கள், மாடிவீடு மற்றும் வர்த்தக கட்டிடத் தொகுதிகள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | உரித்தாக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சட்டரீதியாக உரிமை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,200,000 இற்கான கப் வண்டியொன்று, ரூபா 7,967,144 இற்கான சிங்கள் ட்ரம் வைப்ரேடின் ரோலர் ஒன்று மற்றும் பெறுமதியை இனங்கண்டிருக்காத சிங்கள் கப் வண்டியொன்றினை உரித்தாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நகர சபைக்கு சொந்தமான 01 ஏக்கர் 01 ரூட் 32.9 பர்சஸ் அளவான கலாந்துருகொடுவ காணிக்கு பாதுகாப்பு வேலியொன்று அமைத்திருக்காததுடன் அங்கீகாரமற்ற வதிவோரினால் காணியை தனதாக்கியிருந்த போதிலும் அவர்களை அகற்றுவதற்கு அல்லது காணியை நிலஅளவை செய்து எல்லை வேலிகள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற வதிவோர் காணப்படின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வாடிவீட்டு முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருந்த நிறுவனம் 2018 ஆகஸ்ட் 31 திகதியின் பின்னர் விலகியிருந்தமையால் வாடிவீட்டு அலுவல்கள் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் சபை அதன்மூலம் வருமானம் உழைக்கக் கூடிய வகையில் பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்காமல் மூடப்பட்டிருந்ததுடன் அந்த | 2009 இன் பின்னர் முகாமைத்துவம் நகர சபைக்கு சொந்தமாக காணப்படுகின்றது என. | வருமானம் உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வாடிவீட்டிற்காக 2019 ஏப்ரல் முதல் 2020 திசெம்பர் வரை சபை ஊழியர்கள் இருவரை சேவையில் அமர்த்தி ரூபா 1,544,061 இற்கான விளைவற்ற செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது அவற்றில் 16 பதவிகளில் 28 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 17 மிகைகளும் காணப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி வெற்றிடங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க முடியாது எனவும் மிகைப் பதவியணி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகும் என. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| (ஆ) | 2018-2020 காலப்பகுதியினுள் சேவையை விட்டுச் சென்றுள்ள, ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 06 பேரிடம் கூட்டுத்தொகை ரூபா 262,843 இற்கான கடன் மீதியொன்றினை அறவீடு செய்வதற்கும் கடந்த ஆண்டு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 36,000 இற்கான கடன்மீதியொன்றினை சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் அதற்குரிய சுட்டிகளை இனங்கண்டிருந்த போதிலும் அந்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய அலுவல்கள் நிறைவேற்றப்படும் என. | நிலைபேறான அபிவிருத்தி சுட்டிகள் இனங்கண்டு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்ற வேண்டும். |